வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்— மலர்விழி

தேதி 25.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மாலத்தீவு சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, அந்நாட்டு தலைநகர் மாலே-வில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 4 உறுப்பினர்கள் இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார்.

வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை ஒட்டி, புதுச்சேரியில் தேர்தல் நடத்தும் அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

*பிரதமர்-மாலத்தீவு* (14)

இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு மாலத்தீவு சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, அந்நாட்டு தலைநகர் மாலே விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நாட்டு அதிபர் திரு முகமத் முய்சு, விமான நிலையத்திற்கு நேரில் வந்து பிரதமர் திரு நரேந்திர மோடியை வரவேற்றார். நாளை மாலத்தீவின் 60 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் பிரதமர் அந்நாட்டு அதிபருடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். கடந்த ஆண்டு மாலத்தீவு அதிபர் இந்தியா வந்தபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் கடல் சார் பாதுகாப்பிற்கான விரிவான ஒத்துழைப்பு குறித்த செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து

இருதலைவர்களும் இந்த சந்திப்பின் போது ஆலோசனை நடத்தினர். பிரதமரின் இந்த பயணத்தின் போது, இந்தியா மாலத்தீவு இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

*மக்களவை 1* (2)

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் 5 ஆம் நாளான இன்று மக்களவை மற்றும் மாநிலங்களவை அலுவல்கள் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

வாய்ஸ்

*மக்களவை 2* (15)

வாய்ஸ்

மக்களவை இன்று காலை கூடியதும், 26 ஆவது கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு, நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த ராணுவத்தினருக்கு மரியாதை செலுத்தப்பட்டது. பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை தலைவர் திரு ஓம்பிர்லா அவை நடவடிக்கைகளை 2 மணி வரை ஒத்தி வைத்தார். தொடர்ந்து மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை காரணமாக முதலில் நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. முன்னதாக, மாநிலங்களவை கூடியதும் தமிழகத்தில் இருந்து புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக வை சேர்ந்த திரு வில்சன், திரு எஸ் ஆர் சிவலிங்கம், கவிஞர் சல்மா, மக்கள் நீதி மய்யம் தலைவர் திரு கமலஹாசன் ஆகியோர் புதிய உறுப்பினர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், கோவா அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் தொகுதி மறு சீரமைப்பு குறித்த மசோதாவை மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.

இதனிடையே, மழைக்காலக் கூட்டத் தொடரில் அவை நடவடிக்கைகளை சுமுகமாக நடத்த ஏதுவாக அவை தலைவர் திரு ஓம் பிர்லா தலைமையில் மக்களவையை சேர்ந்த அனைத்து கட்சி தலைவர்களுடன் இன்று புதுடெல்லியில் ஆலோசனை நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் அவையை சுமுகமாக நடத்துவதற்கான ஒருமித்த கருத்து எட்டப்பட்டதால் வரும் திங்கட்கிழமையில் இருந்து அவை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிஜேபி, காங்கிரஸ், சமாஜ்வாடி, திரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

*மன் கீ பாத்* (8)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 124 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 27 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ, அல்லது 1922 என்ற எண்ணில் Missed Call கொடுத்து பெறப்படும் Linkஐ தொடர்பு கொண்டு SMS வாயிலாகவோ தெரிவிக்க இன்று கடைசி நாளாகும்.

*சர்பானந்த சோனோவால்* (9)

நம் நாட்டின் துறைமுகங்களில் சராசரி கப்பல்களின் சரக்கு கையாளும் காலத்திறன் 4 நாட்களில் இருந்து 1 நாளுக்கு குறைவாக உயர்ந்துள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற கடல்சார் நிதி உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பெரிய துறைமுகங்களில் சரக்கு கையாளும் திறன் 70 சதவிகிதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார். வணிகர்கள்

கப்பல் மசோதா மற்றும் கடலோர கப்பல் மசோதா ஆகியவற்றின் மூலம் நாட்டின் கப்பல் சரக்கு கையாளும் திறன் அதிகரித்து இருப்பதாக அமைச்சர் மேலும் கூறினார்.

*சிவராஜ் சிங் சவுகான்* (11)

வளர்ச்சியடைந்த வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் குழு, தொள்ளாயிரம் கிராமங்களை முதன் முறையாக ஆய்வு செய்வதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், கிராமங்களின் வேளாண் நிலவரங்கள் குறித்த தகவல்களை இவ் விஞ்ஞானிகள் சேகரித்துள்ளதாக கூறினார். மேலும், அவர் கூறுகையில், மண் வளம், ஊட்டச்சத்து போன்றவை குறித்து இக்குழுவினர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியதோடு, பயிர், பண்ணை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் அவர்களிடம் விரிவாக எடுத்துரைத்ததாக திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்தார்.

*குடியரசு துணைத் தலைவர்* (8)

புதிய குடியரசு துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அதிகாரியாக மாநிலங்களவை செயலாளர் திரு பிரமோத் சந்திர மோடியை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. துணைத் தேர்தல் அதிகாரிகளாக மாநிலங்களவை இணை செயலாளர் திருமதி கரிமா ஜெயின், மற்றும், மாநிலங்களவை இயக்குநர் திரு விஜயகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். குடியரசு துணைத் தலைவராக இருந்த திரு ஜக்திப் தன்கர் தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து இந்த பதவிக்கு தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத் தக்கது.

*மோடி தமிழகம் 1* (3)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்க வரும் பிரதமரின் பயணம் குறித்த விரிவான தகவல்கள்…….

வாய்ஸ்

*மோடி தமிழகம் 2* (16)

வாய்ஸ்

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 2 நாள் தமிழக பயணத்தின் முதல் நிகழ்வாக, தூத்துக்குடியில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையம், 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வ உ சி துறைமுகத்தில் 3 வது வடக்கு சரக்கு முனையம், 200 கோடி ரூபாய் செலவில் 6 வழி சாலையாக மேம்படுத்தப்பட்ட தூத்துக்குடி துறைமுக சாலையையும், மக்கள் பயன்பாட்டிற்காக பிரதமர் திறந்து வைக்க உள்ளார். மேலும், சேத்தியார்தோப்பு-சோழபுரம் நான்கு வழி சாலை விரிவாக்க பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் அவர், 650 கோடி ரூபாய் மதிப்பில் மதுரை-போடிநாயக்கனூர் ரயில்பாதை மின்மயமாக்கும் பணிகள், நாகர்கோவில்-கன்னியாக்குமரி இரட்டை ரயில் பாதை பணிகளையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

அதனை தொடர்ந்து, திருச்சி விமான நிலையம் வரும் அவர், ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறார். 27 ஆம் தேதி நடைபெறும் விழாவில், முதலாம் ராஜேந்திர சோழனின் கங்கை வெற்றியின் ஆயிரமாவது ஆண்டு விழாவில் அவர் பங்கேற்கிறார். யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய தலமாக

*மோடி தமிழகம் 3* (7)

அறிவிக்கப்பட்டுள்ள பிரகதீஸ்வரர் கோவிலில் நடைபெறும் இவ்விழாவில் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிட உள்ளார்.

இந்நிகழ்வை ஒட்டி, முதலாம் ராஜேந்திர சோழனின் கங்கை பயணம் மற்றும் கடாரம் பயணம் குறித்தும், சைவம் மற்றும் சோழ சகாப்தம் தொடர்பான புகைப்பட கண்காட்சிக்கும் இந்திய தொல்லியல் துறை ஏற்பாடு செய்துள்ளது. பிரதமரின் வருகையை ஒட்டி, அரியலூர் மற்றும் திருச்சி மாவட்டத்தில் உச்ச கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

*தேர்தல் நடத்தும் அதிகாரி* (11)

வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை ஒட்டி, புதுச்சேரியில் தேர்தல் நடத்தும் அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. முதல் கட்டமாக 30 சட்டசபை தொகுதிகளுக்கும் வாக்காளர் பதிவு மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் மேற்கொள்ளுதல், இடமாற்றும் பணிகளை விரைவில் மேற்கொள்ள உள்ளனர். இந்த ஆண்டு வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை தொள்ளாயிரத்து 62 லிருந்து, ஆயிரமாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த சட்டசபை தேர்தல்களில் 3 தொகுதிகளுக்கு 1 தேர்தல் நடத்தும் அதிகாரி நியமிக்கப்பட்டு இருந்த நிலையில், தற்போது 2 தொகுதிகளுக்கு ஒரு தேர்தல் நடத்தும் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

*காரைக்கால்* (7)

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு மாதந்தோறும் 2 சனிக்கிழமைகளில் காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து பொதுமக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இந்நிலையில், நாளை காலை புற்றுநோய் சம்மந்தமான சிறப்பு மருத்துவர்கள் குழு காரைக்கால் அரசு மருத்துவமனைக்கு வர உள்ளதால் பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

*கல்வித்துறை* (9)

புதுச்சேரியில் கடும் வெயில் காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அளித்ததை ஈடு செய்யும் வகையில், எதிர்வரும் 3 சனிக்கிழமைகளில் பள்ளிகள் செயல்படும் என பள்ளி கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை வெயிலின் தாக்கம் காரணமாக திடிர் விடுமுறை அறிவிக்கப் பட்டிருந்தது. இந்நிலையில், ஆகஸ்ட் மாதம் 2, 30, மற்றும் நவம்பர் மாதம் 15 ஆம் தேதி ஆகிய 3 நாட்கள் பள்ளிகள் இயங்கும் எனவும், முறையே, திங்கள், செவ்வாய், புதன் பாட அட்டவணை பின்பற்றப்படும் எனவும் பள்ளி கல்வித் துறை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*புதுவை பல்கலைக் கழகம்* (10)

பசுமை எரிசக்தி தொழில்நுட்பத்துறை, புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம் மற்றும் கல்பாக்கத்தில் உள்ள இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து, நிலையான வளர்ச்சிக்கான அணு சக்தியின் முக்கியத்துவம் குறித்த தேசிய பயிற்சி பட்டறை இன்று நடத்தியது. இதன் தொடக்க விழாவில், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ்பாபு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அணுசக்தி பாதுகாப்பின் அவசியம், பொது விழிப்புணர்வை அதிகரிப்பதன் தேவை குறித்தும் அவர் அப்போது வலியுறுத்தினார். இந்த பயிற்சி பட்டறையில் புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தை சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் உட்பட 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

*சண்முகம் சிலை மாலை*(6)

புதுச்சேரி அரசு சார்பில் சுயமரியாதை சுடர் எம் ஏ சண்முகம் பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்பட்டது. புதுச்சேரி கடலூர் சாலையில் மரப்பாலம் சந்திப்பில் உள்ள அவரது சிலைக்கு அரசு சார்பில் சபாநாயகர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், துணை சபாநாயகர்

திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் சாய் ஜெ சரவணக்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வானிலை (13)

வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வடமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு வங்கக் கடலோர பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, மேற்கு வங்காள கடலோர பகுதிகளில் கரையை கடந்தது. இதனிடையே, கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் அரபிக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை நிலவி வருவதால், தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை இன்று தொடங்கி, வரும் 31 ஆம் தேதி வரை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஒரு சில இடங்களில் பலத்த தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, புதுச்சேரி துறைமுகத்தில் 1 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

ட்ரோன் (8)

இந்திய ராணுவத்திற்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வான் பாதுகாப்பு, தீயணைப்பு பயன்பாட்டிற்கு உதவும் ரேடார்களை வாங்குவதற்கு பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த தீயணைப்பு கட்டுப்பாட்டு ரேடார்கள், போர்விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் எதிரிகளின் ட்ரோன்கள் உட்பட அனைத்து வகையான வான் வழி அச்சுறுத்தல்களையும் கண்டறிந்து தகவல் அளிக்க உதவிடும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

மாலத்தீவு சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, அந்நாட்டு தலைநகர் மாலே-வில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 4 உறுப்பினர்கள் இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார்.

வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலை ஒட்டி, புதுச்சேரியில் தேர்தல் நடத்தும் அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.